CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** Dina Vanigam
**Date:** 06/09/2014
**Edition:** Coimbatore
**Page No:**5
**Headline:**Kothagiri St Judes Public School wins TCS IT Wiz

# டி.சி.எஸ்.ஐ.டி.குவிஸ் போட்டியில் கோத்தகிரி செண்ட் ஜூட்ஸ் பள்ளி வெற்றி

**கோவை, செப். 5**

டி.சி.எஸ். நிறுவனம் ஆண்டுதோறும் ஐ.டி. புதிர்போட்டியினை நாடு முழுவ



தும் பள்ளிகளுக்கிடையே நடத்தி வருகிறது. கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட பள்ளிகளுக்கிடையேயான போட்டி ஆர்.எஸ்.புரம் கலையரங்கில் நடந்தது. இதில் 72 பள்ளிகளைச் சேர்ந்த 8 முதல் பிளஸ் 2 வரையில் பயிலும் மாணவர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியை இந்தியாவின் பிரபல குவிஸ் மாஸ்டர் கிரி தொகுத்து வழங்கினார். எழுத்துப் பூர்வமான ஆரம்ப சுற்றில் பங்கேற்ற 479 அணிகளில் ஆறு அணிகள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. இறுதிப் போட்டியில் கோத் தகிரி செண்ட் ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி மாணவர்களான ஆசிக் ரேஜி, அஸ்வின் பிலிப் ஆகியோர் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றனர்.

2ம் இடத்தை கோவை, பாப்பநாயக்கன்பாளையம் ஜி.கே.டி மெட்ரிக் பள்ளி மாணவர்களான சரத் சுந்தர், ஹரிகிருஷ்ணன் ஆகியோர் தட்டிச் சென்றனர். டிசிஎஸ், வளர்ச்சிச் சந்தைப் பிரிவு தலைவர் விஸ்வநாதன் பரிசுகள் வழங்கினார்.